மட்டக்களப்பு மாநகர சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 10(1) இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாநகர சபையின் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மீளாய்வாண்டின் சம்பள மீளளிப்பு மானியம் (Salary Reimbursement Grant) ரூபா 146,423,574 நிதிக்கூற்றுக்களில் இரு தடவை பதிவு செய்யப்பட்டுள்ளமையினால் அத்தொகையினால் வருமானமானது, அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டு இறுதிக் கணக்கறிக்கையில் சீர் செய்யப்படும்.	சம்பள மீளளிப்பு மானியம் இரு தடவை பதியப்பட்டமையினை நிதிக்கூற்றுக்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களிலிருந்து மீளப்பெறப்பட்ட வைப்புப்பணம் ரூபா 81,110,705 நிதிக்கூற்றுக்களில் வட்டி வருமானமாக பதிவு செய்யப்பட்டமையினால் அத்தொகையினால் வருமானம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	மேற்படி	நிலையான வைப்பு மீளெடுப்பானது வட்டி வருமானமாக பதியப்பட்டமையினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	23 எண்ணிக்கையான நிலையான வைப்புகளிற்கான மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் ரூபா 32,459,717 நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படாமையினால் அத்தொகையினால் வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	மேற்படி	ஆண்டிற்கான வட்டி வருமானத்தினை நிதிக்கூற்றுக்களில் வருமானமாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	2023 ஆம் ஆண்டில் பிரதி ஆணையாளரின் அலுவலகத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால், அழிவடைந்த பீஏவிஎக்ஸ் (PABX) முறைமை, தளபாடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் கூட்டு மொத்தம் ரூபா	மேற்படி	அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	800,000 நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை.		
(உ)	மீளாய்வாண்டின் போது சபையின் 06 நூலகங்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 97,436 ஆன 224 எண்ணிக்கையான புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.	தற்போது புத்தகங்களை நிதிக்கூற்றில் சொத்தாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நன்கொடைப் புத்தகங்களை நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் வெளிப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	**இணக்கமின்மைகள்**	**சபையின் கருத்துரைகள்**	**சிபார்சுகள்**
(அ)	**1947 இன் 29 ஆம் இலக்க மாநகர சபை சட்டம் (252 ஆம் அத்தியாயம்)**			
	(i) பிரிவு 230(1)	சபையானது முறையான அல்லது தேவையான காலத்தில் சொத்துக்களை மதிப்பிட அல்லது வீதவரி வீதத்தினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டின் பினனர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆதன மதிப்பீட்டு மீளாய்வினை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப் படுகின்றது.	சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.
(ஆ)	1951ஆம் ஆண்டின் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் பகுதி II இன் பிரிவு 25	சபை பயன்படுத்துகின்ற 14 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் வாகன வருமான வரிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை.	10 வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டதும் மற்றும் 04 வாகனங்களுக்கு வருமான வரி அனுமதிப்பத்திரம் பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	வாகனங்களுக்கு வருமான வரிப் பத்திரத்தினைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ)	இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	571 (1), (2) மற்றும் (3)	இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டு வைப்புக்களில் காணப்படுகின்ற 341 எண்ணிக்கையான ரூபா 62,408,070 காலங்கடந்த வைப்புக்களை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுப்பதற்கோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட குறிப்பிட்ட வைப்புத் தொகையை வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.	காலங்கடந்த வைப்புக்களை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுப்பதற்கோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	2014 திசெம்பர் 26 ஆம் திகதிய 08/2014 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	சபை பயன்படுத்தி வருகின்ற 19 வாகனங்களுக்கு காப்புறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபையில் திருத்த நிலையில் உள்ள வாகனங்கள் திருத்தப்பட்டதும் காப்புறுதியினை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	வாகனங்களை பாதுகாக்க காப்புறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவீனத்தை மிகைத்த வருமானம் ரூபா 367,821,346 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனத்தை மிகைத்த வருமானம் ரூபா 178,416,550 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை	2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரியும் வரியும்	44,500,000	45,228,900	40,768,200	58,733,200	41,025,000	44,423,700	34,795,400	54,272,500
வாடகை	22,700,000	13,096,100	13,791,500	6,476,600	15,300,000	16,492,100	19,945,100	7,172,000
உத்தரவுப் பத்திரக் கட்டணம்	22,000,000	28,876,000	28,468,500	3,771,600	18,700,000	26,697,400	25,400,200	3,364,100
ஏனைய வருமானம்	93,435,000	229,903,100	229,903,100	---	111,682,000	80,319,100	94,114,300	---
	182,635,000	317,104,400	312,931,300	68,981,400	186,707,000	167,932,300	174,255,000	64,808,600

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ) வீதவரியும் வரியும்		
மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வீதவரிக் கணக்கின் மீதி ரூபா 58,030,225 ஆன 42,700 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. மேலும், வீதவரிக்காக பயன்படுத்தப்படுகின்ற மென்பொருளின் பிரகாரம், வீதவரிக்கான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள 20 பிரிவுகளின் அறவிடப்படுகின்ற வீதவரியானது 08 இற்கு மேற்பட்ட வட்டாரங்களில் 82 சதவீதமான பாரிய நிலுவையாக காணப்படுவதை அவதானிக்க முடிகிறது,	ஆதனவரி நிலுவையினை அறவிட நடமாடும் சேவை, இறுதி அறிவித்தல் அனுப்புதல் மற்றும் தவணை அடிப்படையில் அறவிட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளது.	வீதவரி நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) வாடகை		
(i) மீளாய்வாண்டின் இறுதிவரை 26 எண்ணிக்கையான வெளிக்கடை மற்றும் சந்தைக் கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 1,436,530 மற்றும் 09 எண்ணிக்கையான கோழி இறைச்சிக் கடை, மாட்டிறைச்சிக் கடை, வாகனத் தரிப்பிடம் மற்றும் பொதுச் சந்தைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகை வருமானம் ரூபா 1,270,170	வருமானப் பரிசோதகரூடாக கடை வாடகை நிலுவைகளை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.	நீண்டகால வாடகை நிலுவைகளை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ii)	சபையின் உத்தியோகபூர்வ இல்லங்களை வாடகைக்கு விடல் மூலமாக நீண்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்ற ரூபா 281,740 மீளாய்வாண்டு இறுதிவரை அறவீடு செய்ய சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறுகிய காலத்திற்குள் எம்மால் விபரங்கள் சேகரிக்கப்பட்டு நிலுவையினை அடையாளப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.	அரச இல்லங்களுக்கான நீண்டகால நிலுவை வாடகைகளை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	**அனுமதிப்பத்திரக் கட்டணம்**		
(i)	மீளாய்வாண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரத்தினை வணிக நிறுவனங்கள் பெற்றுக்கொள்வதற்கு சபையினால் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால், ரூபா 2,146,400 வருமானத்தினை சபை இழந்துள்ளது.	வியாபார கட்டண நிலுவை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.	வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டண நிலுவையினை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	மாநகரசபைக் கட்டளைச்சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்)பிரிவு 247 ஆ(2) இன் பிரகாரம், 22 தொலைத்தொடர்பு நிறுவனங்களிடமிருந்து 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்படவேண்டிய வியாபார வரி ரூபா 429,500 இனை மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.	தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வியாபாரவரி நிலுவையினை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(iii)	விளம்பரக்கட்டண நிலுவை ரூபா 1,625,200 மீளாய்வாண்டு இறுதிவரை சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.	விளம்பர கட்டண நிலுவை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.	விளம்பரக் கட்டண நிலுவையினை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	**முத்திரைத் தீர்வைகள்**		
	2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க கிழக்கு மாகாண முத்திரைக்கட்டணம் கைமாற்ற நியதிச்சட்டத்தின் 2(1)பிரிவின் பிரகாரம், 484 எண்ணிக்கையான பதிவுகளுக்கான 28,711,400 முத்திரைத் தீர்வைகளை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.	அறவிடப்படாதுள்ள முத்திரைத் தீர்வைகளை ஆதாரங்களைச் சமர்ப்பித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	சபைக்கு சொந்தமான 107 எண்ணிக்கையான காணிகளை சட்ட ரீதியாக சுவீகரித்துக் கொள்வதற்கும் மற்றும் அவைகளில் 88 எண்ணிக்கையிலான காணிகளுக்கு நில அளவைப் படங்களை பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வுத் திகதி வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மாநகர சபையிலுள்ள பதிவேட்டின் மூலமாக சொத்துக்களுக்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	காணிகளை சட்ட ரீதியாக சுவீகரித்துக் கொள்வதற்கும், நில அளவைப் படங்களை பெற்றுக்கொள் வதற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 193 எண்ணிக்கையான முறைப்பாடுகளில், 50 எண்ணிக்கையான பாதை, காணி மற்றும் சுற்றுமதில் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்வு காணப்பட்டிருக்கவில்லை.	குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் கள உத்தியோகத்தர்களால் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.	பொதுமக்கள் முறைப்பாடுகளை தீர்வு காண துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	சபையினால் 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,639,099 செலவீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கருவப்பங்கேணி பொதுச்சந்தை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.	சந்தை அமைப்பினை மாற்றி மக்கள் அதிகம் வரக்கூடிய இடமாக மாற்றி சந்தை செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான ஒழுங்குபடுத்தல் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.	பொதுச்சந்தை யினை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	1993ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதிவரை மாநகர சபைக்கு உபபிரிகை மூலம் கிடைத்த 19 ஏக்கர் 01 றூட் 03 பேர்ச் பரப்புடைய 37 எண்ணிக்கையான காணிகளின் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உப பிரிகை மூலமாக கிடைக்கப் பெறுகின்ற காணிகளை மதிப்பீடு செய்ய நடவடிக்கை மாநகர சபையினால் மேற்கொள்ளப்படு கின்றது.	உபபிரிகை மூலம் கிடைத்த காணிகளின் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
10 வருடங்களுக்கு மேலாகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்ற சபைக்கு சொந்தமான 15 வாகனங்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது பழுதடைந்த 05 எண்ணிக்கையான வாகனங்களினையும் திருத்தி மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது	இயந்திரப் பொறியியலாளரின் அறிக்கையினைப் பெற்று வாகனங்களைத் திருத்தவும், பாவிக்க முடியாத வாகனங்களை ஏலவிற்பனை	வாகனங்களைத் திருத்தி மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பயன்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுவதற்கான எதுவித நடவடிக்கைகளும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.	

3.3 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	**ஊழியர் வெற்றிடங்கள்**		
	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, 44 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் சபையினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன.	ஆளணி வெற்றிடத்தினை பூர்த்தி செய்யக் கோரி பிரதிப் பிரதம செயலாளருக்கு விண்ணப்பமும் செய்யப்பட்டுள்ளது.	ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	**ஊழியர் கடன்**		
(i)	பதவி வறிதாக்கப்பட்ட 04 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் நிலுவை ரூபா 378,957 உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆவணக் குறைபாடு மற்றும் வறிதாக்கப்பட்ட ஊழியர்களின் நிதி வசதியின்மை காரணமாகவும் ஊழியர் கடனை அறவிடுவது தாமதமாகவுள்ளது.	ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	கடனை மீளப்பெறும் சேவைக் காலத்தினை கருத்தில் கொள்ளாது 04 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன் நிலுவை ரூபா 64,768 நீண்டகாலமாக அறவீடு செய்யப்படாமல் காணப்படுகின்றது.	ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் ஊழியரின் பிள்ளைகளிடமிருந்து கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	மேற்படி

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 சுற்றாடல் பிரச்சினை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், திருப்பெருந்துறை திண்மக்கழிவு நிலையம் மற்றும் கழிவு நீரை சுத்திகரிக்கும் நிலையம் (Night Soil Plant) ஆகியவற்றிக்கான சுற்றாடல்	திருப்பெருந்துறை திண்மக்கழிவு நிலையத்தில் உக்கும் கழிவுகளை இடுவதற்கு நீதிமன்றத்தினால் 2023 ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டமை மற்றும்	திண்மக்கழிவு நிலையம் மற்றும் கழிவு நீரை சுத்திகரிக்கும் நிலையம் ஆகியவற்றிக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை பெறுவதற்கான துரித

	பாதுகாப்பு உரிமங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரை பெறப்பட்டிருக்கவில்லை.	கழிவு நீரை சுத்திகரிக்கும் நிலைய நீர் பகுப்பாய்வின் குறைபாடுகள் காரணமாக தாமதமடைந்துள்ளது. விரைவாக குறைபாடுகளை திருத்தி சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபையின் நிர்வாக எல்லைக்குள் இயங்குகின்ற 40 எண்ணிக்கையான தொழில் நிறுவனங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும் மற்றும் 07 எண்ணிக்கையான வியாபார நிறுவனங்கள் காலாவதியான தங்களது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துக்கொள்வதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெறுவதற்கும் புதுப்பிக்காத, வியாபார நிறுவனங்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை புதுப்பிப்பது தொடர்பான நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம், சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை பெறுவதற்கும், புதுப்பிப்பதற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.